தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 25-10-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் சர்வதேச அளவிலான விவசாய கருத்தரங்கம் (ODLSDA-2016) நடைபெற உள்ளது.

தமிழ்நாடு பல்கலைக்கழகத்தின் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தில் வருகின்ற 24, 25 நவம்பர் 2016 அன்றைய தினங்களில் சர்வதேச அளவிலான விவசாய கருத்தரங்கம் (ODLSDA-2016) நடைபெற உள்ளது. இதில் வளர்ந்து வரும் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி - உலகளாவிலான மற்றும் இந்திய சூழ்நிலையில் நடை முறைகள் மற்றும் முன்னேற்றங்களும், இ-விவசாயம், வெற்றிக்கதைகள், சுயகல்வி மற்றும் சுயதொழில் மூலம் அறிவுத்திறன் பெறுதல் போன்ற முக்கிய அம்சங்கள் விவாதிக்கப் பட உள்ளன.

இந்த கருத்தரங்கில் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து சிறந்த நிபுணர்கள், கல்வியாளர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்க உள்ளனர்.

இந்தக் கருத்தரங்கத்தை திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககம் (கோயம்புத்தூர்), திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி கவுன்சில் (நார்வே), தமிழ்நாடு மாநில திட்ட கமிஷன் (சென்னை), இந்திய விவசாய ஆராய்ச்சி கழகம் (புது டெல்லி), அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை (புது டெல்லி), மத்திய வேளாண் அமைச்சகம் (புது டெல்லி) மற்றும் நபார்டு இணைந்து நடத்த உள்ளது.

மக்கள் தொடர்பு அலுவலர்